பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
10 04 2025 12 40
வியாழக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நவீன முறையில் பாசன வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவிடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பாதுகாப்புப் படைகள் நவீனமயமாக்கப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. அமெரிக்காவுடனான வர்த்தக உறவு மேலும் வலுவடையும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

4. நாட்டின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. ஆசிய பேட்மிட்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Kapila – Tanisha Crasto** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

நவீன முறையில் பாசன வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவிடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் இதனைத் தெரிவித்துள்ள அவர், உற்பத்தியை அதிகரிக்கவும், சிறந்த நீர் மேலாண்மைக்கும் அமைச்சரவை முடிவு உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

திருப்பதி - **Pakala** - காட்பாடி இடையே இரண்டாவது ரயில்பாதை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, தமிழகம் - ஆந்திரா இடையேயான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சரக்குப் போக்குவரத்திற்கும் இந்த இரட்டை ரயில்பாதை திட்டம் உதவிடும் என்று திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

பாதுகாப்புப் படைகளை நவீனமயமாக்குவதற்கான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள வெலிங்டன் ராணுவ பயிற்சிக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

பாதுகாப்புத்துறையைப் பொறுத்தவரை சீர்திருத்தத்திற்கான ஆண்டாக இந்த ஆண்டு கடைபிடிக்கப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு பாதுகாப்புப் படைகள் நவீனமயமாக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நவீன தொழில்நுட்ப ரீதியிலான மோதல்களை எதிர்கொள்வதற்கு பாதுகாப்புப் படைகள் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியமாகிறது என்றும் அவர் கூறினார்.

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்புத் தளவாடங்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

திமுக அரசு தங்கள் மீதான ஊழல் புகார்களில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பும் நோக்கில் தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தை கையில் எடுத்திருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

புதுதில்லியில் தொலைக்காட்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

திமுகவின் ஊழல் காரணமாக மக்கள் சலிப்படைந்துள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

அமெரிக்காவுடனான வர்த்தக உறவு மேலும் வலுவடையும் என்று தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். இது தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதென பிரதமர் திரு. நரேந்திர மோடியும், அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்பும் முடிவு செய்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

இதன் மூலம் கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் இது உத்வேகம் அளிக்கும் என்று அவர் கூறினார்.

இந்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் சுமூகமாக நடைபெற்று வருவதாகவும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

<<<<>>>>

திரிபுராவின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை தமது அரசு மேற்கொள்ளும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. **Manik Saha** கூறியுள்ளார்.

அகர்தலாவில் 15 நாள் கலாச்சாரத் திருவிழாவை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கு பிஜேபி அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாகக் கொண்டு பிஜேபி அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு. **Manik Saha** தெரிவித்தார்.

<<<<>>>>

ஹரியானாவில் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டே பிஜேபி அரசு செயல்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. **Nayab Singh Saini** கூறியுள்ளார்.

**Kurushetra** மாவட்டத்திற்கு உட்பட்ட **Ladwa**-வாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் தமது அரசு செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

ஹரியானாவின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கி வருவதாகவும் திரு. **Nayab Singh Saini** கூறினார்.

<<<<>>>>

நாட்டின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த நிதியாண்டில் ஏற்றுமதி 6 சதவீதம் அதிகரித்துள்ளதாக வர்த்தகத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

மும்பை தீவிரவாத தாக்குதல் சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ள **Tahawwur Rana** வழக்கின் சிறப்பு அரசு வழக்கறிஞராக திரு. **Narender Mann** நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அறிவிக்கையை உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

புதுதில்லியில் உள்ள தேசிய புலனாய்வு அமைப்பின் சிறப்பு நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணை நடைபெற உள்ளது.

அமெரிக்காவில் இருந்து திரு. ராணா இன்று இந்தியா கொண்டுவரப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ள நிலையில், மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

<<<<>>>>

நாடு முழுவதும் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட ஹோமியோபதி மருத்துவர்கள் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

சர்வதேச ஹோமியோபதி தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி விடுத்துள்ள செய்தியில் மத்திய அரசு இதனைத் தெரிவித்துள்ளது.

277 ஹோமியோபதி மருத்துவமனைகளும், 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்தகங்களும், 277 கல்வி நிறுவனங்களும் செயல்பாட்டில் உள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஹோமியோபதி தொடர்பாக 35க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி மையங்களும் செயல்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நாளையொட்டி நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

பக்கவிளைவில்லா சிகிச்சை முறையே ஹோமியோபதியின் சிறப்பம்சமாகும் என்று சென்னையைச் சேர்ந்த மருத்துவர் ரவீந்திரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

தில்லியில் ஆயுஷ்மான் பாரத் சுகாதார கட்டமைப்பு இயக்கத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் இன்று கையெழுதிடப்பட உள்ளது.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்ச்சியில் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது.

தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தாவும் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கான அடையாள அட்டைகளும் வினியோகம் செய்யப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தொலைதொடர்புத் துறையின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் நோக்கில் கைபேசி செயலிக்கான கட்டமைப்பு வரைபடம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் இணையதளங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம் கைப்பேசி நுகர்வோர்கள் தங்களது நிறுவனங்களின் கட்டமைப்பு வசதிகள் குறித்த விவரங்களை முழுமையாக அறிந்துகொள்ள முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய பேட்மிட்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Kapila – Tanisha Crasto** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 12-21, 21-16, 21-18 என்ற செட் கணக்கில் சீன தைபேயின் **Ye Hong Wei – Nicole Gonzales Chan** இணையை வென்றது.

--------------

லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டியில் வில்வித்தைப் போட்டி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2028ஆம் ஆண்டு நடைபெற உள்ள இந்த ஒலிம்பிக் போட்டியில் கலப்பு வில்வித்தை குழுப் போட்டி இடம்பெறுகிறது.

ஒலிம்பிக் போட்டியில் வில்வித்தை இடம்பெறுவது இதுவே முதல்முறையாகும்.

இந்த ஒலிம்பிக் போட்டியில் ட்வெண்ட்-ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியும் இடம்பெறுகிறது.

ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் தலா 6 அணிகள் இதில் பங்கேற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------

உலகக்கோப்பை **Wushu** போட்டியில் இந்தியா 4 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

---------------

**Billie Jean King** கோப்பைக்கான டென்னிஸ் போட்டியில் இந்தியா 2-1 என்ற ஆட்டக் கணக்கில் தாய்லாந்தை வென்றது.

--------------

**Monte Carlo Masters** டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபன்னா - அமெரிக்காவின் **Ben Shelton** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--------------

**Madrid** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Siddhant Banthia –** பல்கேரியாவின் **Alexander Donski** இணை காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

**<<<<>>>>**